

மதுரை மாவட்டத்தில் உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு2024 போட்டியை முன்னிட்டு நடைபெற்ற முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று, முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பேரூராட்சி சேர்மன் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், விழாக்குழுவினர் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளனர்.

# டி.புதுப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை!

## அமைச்சர் ஐ.பெரியசாமி அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்!

சின்னாளப்பட்டி, ஜன. 9 -

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டிக்கு பொதுமக்களிடம் கோரிக்கை மனு பெற வந்த ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் அதிர்வேட்டு முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர் டி.புதுப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், மாநில தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிரா ஊராட்சிகளுக்குச் சென்று கோரிக்கை மனுக்கள் பெற்று அதற்கு தீர்வு வழங்கி வருகிறார். ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம் டி.புதுப்பட்டி ஊராட்சிக்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு டி.புதுப்பட்டி கிராம மக்கள் அதிர்வேட்டுக்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். டி.புதுப்பட்டியில் புதிய நியாய விலைக் கடை கட்டுவதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். அதன்பின்னர் அங்குள்ள நாடக மேடையில் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், ஒன்றியப் பெருந்தலைவருமான பா.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி. ப. வேலுச்சாமி, மாவட்ட திட்ட இயக்குநர் பெ.திலகவதி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றியப் துணைப் பெருந் தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட கவுன்சிலர் சுப்பு லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் அருணாச்சலம் வரவேற்றார். நிகழ்ச்சியில் பொது மக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளுக்குச் சென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அதற்க்கு தீர்வு காண்பதோடு மக்களின் கோரிக்கையை ஏற்று தேவைப்படும் இடங்களில் மேல் நிலை தண்ணீர் தொட்டிகள், நாடக மேடை, பள்ளி வகுப்பறைக் கட்டிடங்கள், கழிப்பறை வசதி, தார்சாலை, சிமெண்ட் சாலை உட்பட பல்வேறு நலத்திட்ட பணிகள் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் மக்களை தேடி அனைத்து நலத்திட்டங்களும் இல்லம் தேடி வருகிறது. மகளிருக்கான உரிமைத் தொகை தகுதியுள்ள அனைவருக்கும் கிடைக்கும்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டி.புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கழிப்பறை வசதி, சமுதாயக்கூடம் வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். விரைவில் அதற்கான தீர்வு காணப்பட்டு நலத்திட்ட பணிகள் நடைபெற உள்ளது. என்றார். முன்னதாக டி.புதுபட்டி கிராமத்திற்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் சார்பாக பரிவட்டம் கட்டி, ஆரத்தி எடுத்து அதிர்வேட்டுக்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்களின் கூட்டம் அதிகமாக இருந்ததால், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்கள் இருக்கு இடத்திற்கேச் சென்று கோரிக்கை மனுக்களை பெற்று அதற்கு தீர்வுகாண அதிகாரிகளுக்கு உத்திர விட்டார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு தாசில்தார் செழியன், நிகழ்ச்சியில் ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மணி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவண், பொது விநியோக திட்ட துணைப் பதிவாளர் அன்புக்கரசன், ரெட்டியார்சத்திரம் நிலவளவங்கி செயலாளர் சக்கரவர்த்தி மணிமாறன், பொறியாளர் மனோகரன், தொ.மு.ச. சந்திரமோகன், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், வட்டார காங்கிரஸ் தலைவர் நவாப்பட்டி முருகா னந்தம், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் சுதா ஆரோக்கிய செல்வி மேரி, ஒன்றியகுழு உறுப்பினர்கள் ராயப்பரமேஷ், சுமதி கணேசன், காளீஸ்வரி மலைச்சாமி, நாகலெட்சுமி ரமேஷ், கோனூர் திருப்பதி, பொதுக்குழு உறுப்பினர் டென்னிஸ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் அருளானந்தம், கே.புதுக்கோட்டை ரமேஷ், டி.புதுப்பட்டி கிளைச் செயலாளர் உதயக்குமார், இளைஞரணியைச் சேர்ந்த மணிகண்டன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முருகையா, வழக்கறிஞர் கதிர்வேல், திமுக நிர்வாகி கபில்நாத், மாணவரணியைச் சேர்ந்த முத்து கிருஷ்ணன், மற்றும் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், டாஸ்மாக் வடிவேல், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



"எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி" திட்டத்தின் பள்ளி தூய்மை பணி செயல்பாடுகளை பூவிருந்தவல்லியில் 1931 இல் இருந்து செயல்பட்டு வரும் பார்வைத்திறன் குறைபாடுடையோர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 137 ஆண்டுகள் பழமையான கட்டடத்தில் அமைச்சர்கள் ஆர்.காந்தி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர், ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு. நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன், பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குனர் கண்ணப்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நீலகிரி மாவட்டத்தில் சிறுத்தை தாக்கி உயிரிழந்த

# இருவரின் குடும்பங்களுக்கு - தலா ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன.9 -

நீலகிரி மாவட்டத்தில் சிறுத்தை தாக்கி உயிரிழந்த இருவர் குடும்பத்திற்கு நிதி வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

**நீலகிரி மாவட்டம், ஏலமன்னா கிராமம், மேங்கோரேன்ஜ் அஞ்சல் பகுதியைச் சேர்ந்த திருமதி.சரிதா (வயது 29) என்பவர் கடந்த 29.12.2023 ஆம் தேதி அன்றும், மேங்கோரேன்ஜ் (அஞ்சல்), எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்பு, ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சிறுமி நான்சி (வயது 3½) என்பவர் கடந்த 06.01.2024 அன்றும் சிறுத்தை தாக்கியதன் காரணமாக உயிரிழந்தார்கள் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.**

**விலை மதிப்பில்லாத இந்த இரு உயிரிழப்புகளைச் சந்தித்துள்ள குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்**

**மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவியாக தலா 10 இலட்சம் ரூபாய் தமிழக அரசின் சார்பில் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியுள்ளார்.

### பொங்கல் பரிசுத் தொகுப்பு

# ரூ.1000 ரொக்கம் பெற வீடு, வீடாக டோக்கன்கள் விநியோகம்!

*சென்னை, ஜன.9 -*

*பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000 பெறுவதற்கான டோக்கன் நேற்று முன்தினம் முதல் வீடு, வீடாக வழங்கப்படுகிறது.*

*தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை மக்கள் சிறப்புடன் கொண்டாடுவதற்காக ஆண்டு தோறும் தமிழ்நாடு அரசு சார்பில் அரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவற்றுடன் பணமும் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு பொங்கல் பண்டிகை வருகிற 15-ஆம் தேதி (திங்கட்கிழமை) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. தைப் பொங்கலையொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.1000 ரொக்கப்பணம் வழங்கப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.*

*இதன்படி, தமிழ்நாட்டில் 2.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் ரூ.1000 வழங்கப்படுகிறது. இதற்காக நேற்று காலை முதல் நியாய விலைக் கடை ஊழியர்கள் வீடு, வீடாக சென்று டோக்கன் வினியோகத்தை தொடங்கினர். அந்த டோக்கனில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நாள், நேரம் உள்ளிட்டவை குறிப்பிடப்பட்டுள்ளது. டோக்கன் 7.1.2024 முதல் 9.1.2024 முடிய வினியோகிக்கப்படுகிறது. 10.1.2024 (புதன்கிழமை) முதல் தமிழ்நாடு முழுவதும் உள்ள 35 ஆயிரம் நியாய விலைக் கடைகள் மூலமாக பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட உள்ளது.*

*சென்னையில் பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் ரூ.1000 வழங்குதல் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். அதைத்தொடர்ந்து அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொங்கல் சிறப்பு தொகுப்பு விநியோகம் தொடங்கப்படும். மற்ற மாவட்டங்களில் அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதிகள் தொடங்கி வைக்கின்றனர். வரும் 10ஆம் தேதி முதல் 13 வரை நியாயவிலைக் கடைகளில் பொங்கல் சிறப்பு தொகுப்பாக பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மற்றும் ரூ.1000 ரொக்கப் பணத்தை பெற்றுக் கொள்ளலாம். விடுபட்டவர்களுக்கு 14ஆம் தேதி வரை பொங்கல் தொகுப்பு, ரொக்கப்பணத்தை பெற்று கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அதே நேரத்தில் பொங்கல் தொகுப்பு, ரொக்கப்பணத்தைப் பெற வரும் குடும்ப அட்டைதாரர்கள் எந்தச் சிரமமும் இன்றி பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மக்கள் வெயிலில் நிற்பதை தவிர்க்கும் வகையில் சாமியானா பந்தல்கள் நியாய விலைக் கடைகளில் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*பொங்கல் பரிசு தொகுப்பு முறையாக விநியோகிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க மாவட்ட கலெக்டர்கள் மேற்பார்வையில் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை, இந்த மாதம் பொங்கலுக்கு முன்னதாக அதாவது, வரும் 10-ஆம் தேதியே 1 கோடியே 15 லட்சம் மகளிரின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.*

### தமிழ்நாட்டில் பரவலான தொழில் வளர்ச்சி!

# முதல்வரின் முயற்சி தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமையும்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 9 -

'தினத்தந்தி' நாளேடு தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு முதல்வரின் முயற்சியால் தமிழ்நாடு ஒரு பரவலான வளர்சியடையும் என்றும், மாநாடு தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமையும் என்றும் முதல்வரை பாராட்டியுள்ளது.

அது வருமாறு:

சென்னையில் 2 நாட்கள் நடைபெறும் தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், டென்மார்க், தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா உள்பட பல நாடுகள் பங்குபெற்றுள்ளன. 450க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்துகொண்டு இருக்கிறார்கள். முதல்நாளான நேற்று வெளிநாட்டு முன்னணி தொழில் நிறுவனங்களின் பிரதிநிதி களும், நம் நாட்டு தொழில் முனைவோரும் காட்டிய ஆர்வத்தைப் பார்த்தால், தமிழக அரசின் இலக்கான ரூ.5 லட்சம் கோடிக்கான முதலீட்டை தாண்டிவிடும் என்ற நம்பிக்கையை கொடுத்துள்ளது. தொடக்க நிகழ்ச்சியி லேயே ரூ.51 ஆயிரத்து 754 கோடிக்கான





புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இது தமிழ்நாட்டில் நடக்கும் 3வது உலக முதலீட்டாளர்கள் மாநாடாகும். முதல் மாநாடு ஜெயலலிதா முதல்அமைச்சராக இருந்தபோது 2015ம் ஆண்டு நடந்தது. அப்போது 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2 லட்சத்து 42 ஆயிரத்து 160 கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும், 4 லட்சத்து 70 ஆயிரத்து 65 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் பெருமையுடன் அறிவிக்கப்பட்டது. 2வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு எடப்பாடி பழனிசாமி முதல்அமைச்சராக இருந்தபோது 2019ம் ஆண்டு நடந்தது. அப்போது, 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.3 லட்சத்து 501 கோடி அளவுக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், 10 லட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த இரு மாநாடுகளிலும் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் தொழில் முதலீடுகளாக மாறவில்லையென்றாலும், பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு வந்தவுடன் ஆரம்பத்தில் இருந்தே தொழில் வளர்ச்சிக்கு மிகதீவிர நடவடிக்கை எடுத்தார். முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் துபாய் மற்றும் சில நாடுகளுக்கு நேரடியாக சென்று தொழில்முனைவோரை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலைகளை விளக்கிக்கூறி பல முதலீடுகளை கொண்டுவந்தார். இதுபோல, முன்பு தொழில்துறை அமைச்சராக இருந்த அமைச்சர் தங்கம் தென்னரசும், இப்போது அமைச்சராக இருக்கும் டி.ஆர்.பி.ராஜாவும் சீரிய முயற்சிகளை எடுத்தனர்.

மேலும், முன்பு தொழில் துறை செயலாளர்களாக இருந்த எஸ்.கிருஷ்ணன், முருகானந்தம், இப்போது செயலாளராக இருக்கும் அருண்ராய் ஆகியோர் மிக முனைப்புடன் முயற்சிகளை எடுத்தனர். இவ்வாறு அனைவரும் எடுத்த கூட்டு முயற்சிகளின் விளைவாக 241 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, ரூ.3 லட்சம் கோடி அளவில் தொழில்முதலீடு ஈர்த்துள்ளன. 4 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பொதுவாக, இதுவரை எடுத்த முயற்சிகளால், பெரும்பாலும் சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள மாவட்டங்களிலேயே தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. ஆனால், முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலான தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும், அதற்கு இந்த முதலீட்டாளர் மாநாடு வித்திட வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அதன் விளைவாக, தூத்துக்குடியில் வியட்நாம் நாட்டை சேர்ந்த 'வின்பாஸ்ட்' நிறுவனம் மின்சார வாகன தொழிற்சாலையை ரூ.16 ஆயிரம் கோடி முதலீட்டில் தொடங்கப்போகிறது. இதன்மூலம் அந்த தொழிற்சாலைக்கு தேவையான உதிரிபாகங்களை தயாரித்து கொடுக்கும் பல சிறிய தொழிற்சாலைகளும் அப்பகுதியில் வரும். இதுபோல, இந்தியாவின் பல முன்னணி தொழில்நிறுவனங் களும், வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் பரவலாக தொழில் தொடங்கப் போவதால், இந்த மாநாடு ஒரு தொழில்புரட்சிக்கு அடிப்படையாக அமையும்.

இவ்வாறு 'தினத்தந்தி' முதல்வருக்கு புகழாரம் சூட்டியுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம் பள்ளி கிழக்கு ஒன்றியத்தில் 4 இடங்களில் பயணியர் நிழற்கூடங்கள் கட்டுவதற்காக டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அடிக்கல் நாட்டினார். ஒன்றியச் செயலாளர் சாமுண்டி தலைமை வகித்தார். எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 33 லட்சத்தில் இவைகள் கட்டப்படுகின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க.காசிநாதன் (எ) தமிழரசன்**

**சனவரி 9 (2013)**



**சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**